# 01 அனைவருக்கும் வணக்கம்

இங்கு பிரதம அதிதியாக வருகை தந்திருக்கும் பிரிவேனாப் பிரிவின் பணிப்பாளர் கௌரவ வணக்கத்திற்குரிய அஸ்ஸஜீ தேரர் அவர்களே, மதிப்பிற்குரிய பணிப்பாளர் அவர்களே, குருமார்களே, அன்புக்குரிய பிரிவேனாவின் ஆசிரியர்களே, அனைவருக்கும் காலை வணக்கம். எமது பிரிவேனாவின் அழைப்பினை ஏற்று இங்கு வருகை தந்த அனைவரையும் வருக வருக என நாங்கள் வரவேற்கின்றோம்.

எமது பிரிவேனாவில் இடம்பெறும் இலக்கியப் போட்டியில் பல பிரிவுகளின் கீழ் போட்டியாளர்கள் பங்குபற்றுகின்றார்கள். கையெழுத்துப் போட்டி, கட்டுரைப் போட்டி, சிறுகதைப் போட்டி போன்றன இதில் இடம்பெற உள்ளன.

மேலும் நான் கூறப் போகும் விடயம் தொடர்பாகவும் தயவுசெய்து கவனிக் கவும். எங்கள் பிரிவேனாவின் சிற்றுண்டிச்சாலையில் உங்களுக்குத் தேவையான உணவுகளை நீங்கள் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

பொலித்தின் மற்றும் கழிவுப் பொருட்களை உரிய இடங்களில் போடவும். மேலும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

வணக்கம்

## சொல் அறிமுகம்
## වදන් පෙළ

| | | |
|---|---|---|
| அதிதி | - | ආරාධිත අමුත්තා |
| பணிப்பாளர் | - | අධ්‍යක්ෂ |
| அழைப்பு | - | ඇරයුම |
| வரவேற்புரை | - | පිළිගැනීමේ කථාව |
| பிரிவுகள் | - | අංශ |
| போட்டி | - | තරගය |
| கையெழுத்து | - | අත් අකුරු |
| கட்டுரை | - | රචනාව |
| சிறுகதை | - | කෙටි කථාව |



### செயற்பாடு 1
### ක්‍රියාකාරකම 1

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**
**පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.**

01. *விழாவின் பிரதம அதிதி யார்?* ______________________________

02. *இந்நிகழ்விற்கு வருகைதந்த ஏனையோரைக் குறிப்பிடுங்கள்?*
______________________________

03. *இந்நிகழ்வில் நடைபெறுகின்ற போட்டிகள் எவை?*
______________________________

04. *தேவையான உணவுகளை எங்கே பெற்றுக்கொள்ள முடியும்?*
______________________________

05. *குப்பைகளை எங்கு போட வேண்டும்?*
______________________________

## செயற்பாடு 2
## ක්‍රියාකාරකම 2

**பின்வரும் எழுவாய்களுக்குப் பொருத்தமான பயனிலைகளைத் தெரிவுசெய்து இணையுங்கள்.**
පහත සඳහන් උක්ත පදයට ගැළපෙන ආඛ්‍යාත පදය සොයා යා කරන්න.

| | | |
|---|---|---|
| 01. | நான் | நடக்கின்றீர்கள் |
| 02. | நாம் | நடக்கின்றேன் |
| 03. | நாங்கள் | நடக்கின்றாய் |
| 04. | நீ | நடக்கின்றோம் |
| 05. | நீங்கள் | நடக்கின்றோம் |

## செயற்பாடு 3
## ක්‍රියාකාරකම 3

**உதாரணத்தை அவதானித்து இடைவெளிகளை நிரப்புங்கள்.**
උදාහරණයේ දක්වා ඇති ආකාරයට හිස්තැන් පුරවන්න.

**உ.தா. - நான் ஓடுகின்றேன்.**

நாம் ______________________

நாங்கள் ______________________

நீ ______________________

நீங்கள் ______________________

## செயற்பாடு 4
## ක්‍රියාකාරකම 4

**பொருத்தமான பெயர்ச் சொற்களை இட்டு இடைவெளிகளை நிரப்புங்கள்.**
ගැළපෙන නාම පදය යොදා හිස්තැන් සම්පූර්ණ කරන්න.

01. ______________________ தேடுகின்றீர்கள்.

02. ______________________ அடிக்கின்றேன்.

03. ______________________ விளையாடுகின்றோம்.

04. ______________________ சாப்பிடுகின்றாய்.

05. ______________________ பாடுகின்றோம்.

## செயற்பாடு 5
## ක්‍රියාකාරකම 5

**உங்கள் வகுப்பறைக்குப் பொருத்தமான அறிவித்தல்கள் இரண்டினைப் பாடத்தில் இருந்து தெரிந்தெடுத்து எழுதுங்கள்.**
පාඩම ඇසුරෙන් ඔබගේ පන්ති කාමරයට ගැළපෙන නිවේදන දෙකක් ලියන්න.

01.

02.

## செயற்பாடு 6
## ක්‍රියාකාරකම 6

**பின்வரும் அழைப்பிதழை அவதானித்து, அதில் உள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டு அழைப்பிதழ் ஒன்றினைத் தயாரியுங்கள்.**

පහත සඳහන් ආරාධනා පත්‍රය අවධානයට ගෙන ඒ සමග ඉදිරිපත් කරන ලද තොරතුරු උපයෝගි කරගෙන ඇරයුම් පතක් සකස් කරන්න.

**இலக்கியப் போட்டி 2017**

ஸ்ரீ குணரதன பிரிவேனா

| | | |
|---|---|---|
| திகதி | - | 2017 - 06 - 15 |
| நேரம் | - | மு.ப. 9.00 மணிக்கு |
| இடம் | - | ஸ்ரீ குணரதன பிரிவேனாவின் பிரதான மண்டபம் |
| பிரதம அதிதி | - | பிரிவேனாப் பிரிவின் பணிப்பாளர் தேரர் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
இலக்கிய விழா ஏற்பாட்டுக் குழு.

*பரிசளிப்பு விழா*

*2017 . 08. 15*

*பிரிவேனாவின் பிரதான மண்டபம்*

*கல்வி அமைச்சர் (பிரதம அதிதி)*

*நேரம் - பி. ப. 2. 00 மணிக்கு*